**சுருக்கம்**

வேளாண்மை–உழவர் நலத் துறை – தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை – வேளாண்மை நிதிநிலை அறிக்கை 2022–23 – அறிவிப்புகள் – நீலகிரி, கொடைக்கானல், கொல்லிமலை, ஏற்காடு, குற்றாலம், மற்றும் ஜவ்வாது மலைப்பகுதிகளில் உள்ள தோட்டக்கலைப் பண்ணைகளில் ரூ.100 இலட்சம் நிதியில் சுவைதாளிதப் பயிர்களுக்கான மரபணு வங்கி அமைத்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை–உழவர் நலத் (தோ.க.1.1) துறை**

அரசாணை (நிலை) எண்.103 நாள்: 23.05.2022

திருவள்ளுவர் ஆண்டு, 2053

சுபகிருது, வைகாசி 9–ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, கடித எண். எப்.பி.எம் 3/3738/2022, நாள் 27.04.2022 மற்றும் 28.04.2022.

* * *

**ஆணை:**

சுவைதாளிதப் பயிர்களின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டும், விவசாயிகளின் விருப்பத்திற்கேற்ப பல்வேறு வகையான தரமான சுவைதாளிதப் பயிர்களின் நடவுச்செடிகளை விநியோகிக்கும் வகையிலும், சுவைதாளிதப் பயிர்களுக்கான மரபணு வங்கியை உருவாக்கிட மாண்புமிகு வேளாண்மை -உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 19.03.2022 அன்று சட்டப் பேரவையில் தாக்கல் செய்த வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் பிறவற்றுடன் பின்வரும் அறிவிப்பினையும் வெளியிட்டுள்ளார்கள்:-

> "முதற்கட்டமாக இவ்வாண்டு மிளகு, சாதிக்காய், கிராம்பு போன்றவற்றிற்கான மரபணு வங்கி நீலகிரி, கொடைக்கானல், கொல்லிமலை, ஏற்காடு, குற்றாலம் மற்றும் ஜவ்வாதுமலைப்பகுதிகளில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் துவக்கப்பட்டு, உள்ளூர் இரகங்கள் அறிமுகப்படுத்தப்படும்."

2. மேலே படிக்கப்பட்ட கடிதங்களில், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்கள் மிளகு, ஜாதிக்காய், கிராம்பு, இலவங்கப்பட்டை மற்றும் ஏலக்காய் ஆகியவற்றின் வகைகள் மற்றும் இரகங்கள், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனங்கள், மாநில வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் மாநில

[த.பி.பா]

தோட்டக்கலைத் துறைகளிலிருந்து சேகரிக்கப்பட்டு, நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு, கொல்லிமலை, குற்றாலம், ஜவ்வாதுமலை ஆகிய இடங்களில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் மரபணு வங்கிகள் அமைத்து பராமரிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

3. மேலும், மேலாண்மை இயக்குநர், தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்கள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள சுவைதாளிதப் பயிர்களுக்கான [மிளகு, ஜாதிக்காய், கிராம்பு, இலவங்கப்பட்டை மற்றும் ஏலக்காய்] மரபணு வங்கி அமைப்பது தொடர்பான செலவினங்கள் குறித்து பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

| வ. எண் | பயிர்கள்- மரபணு வங்கி | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மிளகு | 39.750 |
| 2 | ஜாதிக்காய், | 19.236 |
| 3 | கிராம்பு | 9.554 |
| 4 | இலவங்கப்பட்டை | 8.910 |
| 5 | ஏலக்காய் | 22.550 |
| | மொத்தம் | 100.000 |

4. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்கள் சுவைதாளிதப் பயிர்களின் மரபணு வங்கியானது, பயனுள்ள பண்புகளின் சேகரிப்பு தொகுப்பாகும் என்றும் இது, சுவைதாளிதப் பயிர்களின் எதிர்கால மேம்பாட்டிற்கான மகத்தான வாய்ப்பிற்கு வழிவகுக்கிறது என்றும், உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளில், உயர்மதிப்புள்ள இத்தகைய "சுவைதாளிதப் பயிர்களின்" முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு, இதன் இரகங்களைக் கண்டறிந்து, சேகரித்தல் - பாதுகாத்தல் - உற்பத்தி செய்தல் - விவசாயிகளுக்குத் தரமான நடவுச்செடிகளை விநியோகிப்பது அவசியமாகிறது என்றும், எனவே, அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் மிளகு, ஜாதிக்காய், கிராம்பு, இலவங்கப்பட்டை மற்றும் ஏலக்காய் ஆகியவற்றிற்கான மரபணு வங்கிகளை உருவாக்குவது முக்கியமானதாகும். மேலும், இத்தகைய மரபணு வங்கி அமைப்பதற்காக தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின், பண்ணை வரவின நிதிலிருந்து ரூ.100 இலட்சம் ஐந்து ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்படும். எனவே, விவசாயிகளுக்குத் தரமான நடவுச்செடிகளை வழங்கிட ஏதுவாக, அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் சுவைதாளிதப் பயிர்களுக்கான மரபணு வங்கிகள் இணைப்பு-I-இல் காணும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் அமைக்க உரிய ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

5. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து "முதற்கட்டமாக இவ்வாண்டு மிளகு, சாதிக்காய், கிராம்பு போன்றவற்றிற்கான மரபணு வங்கி நீலகிரி, கொடைக்கானல், கொல்லிமலை, ஏற்காடு, குற்றாலம் மற்றும் ஜவ்வாது மலைப்பகுதிகளில் உள்ள அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில்

[த.பி.பா]

துவக்கப்பட்டு, உள்ளூர் இரகங்கள் அறிமுகப்படுத்தப்படும்." என அறிவித்த அறிவிப்பினை இணைப்பு-I-இல் காணும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் அமைத்து, தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின், பண்ணை வரவின நிதியிலிருந்து ரூ.100 இலட்சம் ஐந்து ஆண்டுகளில் இணைப்பு-II-இல் கண்டவாறு ஒதுக்கீடு செய்து செயல்படுத்துமாறு ஆணை வெளியிடப்படுகிறது. இந்த செலவினம் மேற்கொள்ள தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமையின் பொதுக் குழுவின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

6. இவ்வாணை நிதி (வேளாண்மை-உ.ந) துறையின் அ.சா.எண்.173/ ADS(GKT)/ 2022, நாள்.05.05.2022-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

[ஆளுநரின் ஆணைப்படி]

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, சென்னை-5
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி முகமை, சென்னை – 5.
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை-18
முதன்மை மாநில கணக்காயர் (E&RSA), சென்னை-18
மாநில கணக்காயர் (தணிக்கை) சென்னை-18
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை-9.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை -8.

**நகல்:**
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை-உழவர் நலத் துறை, சென்னை-9.
நிதித்(வேளாண்-உ.ந) துறை, சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் [அநமு.3 / வ(ம)தி] துறை, சென்னை-9
உதவி நிரலர், வேளாண்மைத்-உழவர் நலத் துறை, சென்னை-9
சம்பந்தப்பட்ட கோப்பு எண்.10685/தோ.க.1.1/2022
இருப்புக் கோப்பு / உதிரி.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

இரா. தாமஸ் 24/5/22
பிரிவு அலுவலர்

## இணைப்பு–I

**சுவைதாளிதப் பயிர்களுக்கான மரபணு வங்கி ஏற்படுத்தப்படும் அரசு தோட்டக்கலைப் பண்ணைகளின் விவரம்**

### மிளகு

| | |
|---|---|
| நாமக்கல் | செம்மேடு |
| நீலகிரி | தேவாலா |
| சேலம் | ஏற்காடு |
| திண்டுக்கல் | சிறுமலை |
| திண்டுக்கல் | தாண்டிக்குடி |

### ஜாதிக்காய்

| | |
|---|---|
| நாமக்கல் | செம்மேடு |
| நாமக்கல் | படசோலை |
| நீலகிரி | கல்லார் |
| திண்டுக்கல் | சிறுமலை |
| திண்டுக்கல் | தாண்டிக்குடி |

### கிராம்பு

| | |
|---|---|
| நாமக்கல் | செம்மேடு |
| நாமக்கல் | படசோலை |
| நீலகிரி | கல்லார் |
| திண்டுக்கல் | தாண்டிக்குடி |

### இலவங்கப்பட்டை

| | |
|---|---|
| திண்டுக்கல் | தாண்டிக்குடி |

### ஏலக்காய்

| | |
|---|---|
| திண்டுக்கல் | தாண்டிக்குடி |

**சி.சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்**
**அரசுச் செயலாளர்**

**/உண்மை நகல்/**

இரா. [signature] 24/5/22
பிரிவு அலுவலர்

## இணைப்பு–II

**சுவைதாளித பயிர்களுக்கான மரபணு வங்கி அமைப்பதற்கான செலவின மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்)**

**இணைப்புகள் – சுருக்கம்**

| வ. எண் | சுவைதாளிதப் பயிர்கள் [பரப்பு விவரம்] | முதல் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | நான்காம் ஆண்டு | ஐந்தாம் ஆண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மிளகு[6 ஏக்கர்] | 13.350 | 6.600 | 6.600 | 6.600 | 6.600 | 39.750 |
| 2 | ஜாதிக்காய்[4.2 ஏக்கர்] | 7.476 | 2.940 | 2.940 | 2.940 | 2.940 | 19.236 |
| 3 | கிராம்பு[2 ஏக்கர்] | 3.927 | 1.407 | 1.407 | 1.407 | 1.407 | 9.554 |
| 4 | இலவங்கம்[2.2 ஏக்கர்] | 4.620 | 2.420 | 1.870 | 0.000 | 0.000 | 8.910 |
| 5 | ஏலக்காய்[5 ஏக்கர்] | 13.500 | 5.425 | 3.625 | 0.000 | 0.000 | 22.550 |
| | மொத்தம் | 42.873 | 18.792 | 16.442 | 10.947 | 10.947 | 100.000 |

**பயிர்கள் மற்றும் ஆண்டு வாரியான செலவின விபரம்**

**I மிளகு**

| வ. எண் | விவரங்கள் | முதல் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | நான்காம் ஆண்டு | ஐந்தாம் ஆண்டு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | நடவுச்செடிகள் (ஒரு குழிக்கு2 மிளகு செடிகள் வீதம்) (போக்குவரத்து செலவுடன்) – 30 இரகங்கள் | 4.320 | – | – | – | – | 4.320 |
| 2 | சில்வர்ஓக், எரித்ரினாமுருங்கை போன்ற பற்றி வளர உதவும் மரங்கள் (ஒரு ஏக்கருக்கு450 எண்கள் வீதம்) | 0.270 | – | – | – | – | 0.270 |
| 3 | மிளகு பற்றி வளரக்கூடிய மரங்களுக்கு குழி எடுத்தல் மற்றும்நடவு | 1.350 | – | – | – | – | 1.350 |
| 4 | மிளகு பயிர்கள் நடவு | 0.810 | – | – | – | – | 0.810 |
| 5 | பராமரிப்பு மற்றும்நடவுக்கு பிந்தைய பணிகள் | 1.800 | 1.800 | 1.800 | 1.800 | 1.800 | 9.000 |
| 6 | ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மை | 4.800 | 4.800 | 4.800 | 4.800 | 4.800 | 24.000 |
| | மொத்தம் | 13.350 | 6.600 | 6.600 | 6.600 | 6.600 | 39.750 |

| II | ஜாதிக்காய் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பயிர் | விவரங்கள் | முதல் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | நான்காம் ஆண்டு | ஐந்தாம் ஆண்டு | மொத்தம் |
| 1 | நடவுச் செடிகள் (போக்குவரத்து செலவுடன்) | 4.032 | – | – | – | – | 4.032 |
| 2 | நடவு | 0.504 | – | – | – | – | 0.504 |
| 3 | ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மை | 1.680 | 1.680 | 1.680 | 1.680 | 1.680 | 8.400 |
| 4 | நடவுக்கு பிந்தைய பணிகள் | 1.260 | 1.260 | 1.260 | 1.260 | 1.260 | 6.300 |
| | மொத்தம் | 7.476 | 2.940 | 2.940 | 2.940 | 2.940 | 19.236 |

| III | கிராம்பு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வ.எண் | விவரங்கள் | முதல் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | நான்காம் ஆண்டு | ஐந்தாம் ஆண்டு | மொத்தம் |
| 1 | நடவுச் செடிகள் | 2.400 | – | – | – | – | 2.400 |
| 2 | நடவு | 0.120 | – | – | – | – | 0.120 |
| 3 | ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மை | 0.800 | 0.800 | 0.800 | 0.800 | 0.800 | 4.000 |
| 4 | நடவுக்கு பிந்தைய பணிகள் | 0.607 | 0.607 | 0.607 | 0.607 | 0.607 | 3.034 |
| | மொத்தம் | 3.927 | 1.407 | 1.407 | 1.407 | 1.407 | 9.554 |

| IV | இலவங்கப்பட்டை | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வ்.எண் | விவரங்கள் | முதல் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | நான்காம் ஆண்டு | ஐந்தாம் ஆண்டு | மொத்தம் |
| 1 | நடவுச் செடிகள் | 1.650 | – | – | – | – | 1.650 |
| 2 | நடவு | 0.660 | – | – | – | – | 0.660 |
| 3 | ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மை | 1.650 | 1.650 | 1.100 | – | – | 4.400 |
| 4 | நடவுக்கு பிந்தைய பணிகள் | 0.660 | 0.770 | 0.770 | – | – | 2.200 |
| | மொத்தம் | 4.620 | 2.420 | 1.870 | – | – | 8.910 |

| V | ஏலக்காய் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வ.எண் | விவரங்கள் | முதல் ஆண்டு | இரண்டாம் ஆண்டு | மூன்றாம் ஆண்டு | நான்காம் ஆண்டு | ஐந்தாம் ஆண்டு | மொத்தம் |
| 1 | நடவுச் செடிகள் | 5.000 | – | – | – | – | 5.000 |
| 2 | நடவு | 1.250 | – | – | – | – | 1.250 |
| 3 | ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் பூச்சி மேலாண்மை | 3.750 | 3.750 | 2.500 | – | – | 10.000 |
| 4 | தேனீ பெட்டிகளை நிறுவுதல், நடவுக்கு பிந்தைய பணிகள் | 3.500 | 1.675 | 1.125 | – | – | 6.300 |
| | மொத்தம் | 13.500 | 5.425 | 3.625 | – | – | 22.550 |

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசுச் செயலாளர்

/உண்மை நகல்/

24/5/22
பிரிவு அலுவலர்